JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

STC No. 324/2024 Crime No. Station

| | | |
|---|---|---|
| Name | Pw-2 – ராஜேஷ் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 12th day of August 2025 | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் நல்லக்கவுண்டன்புதூரில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 29.12.2023 ஆம் தேதியன்று மாலை சுமார் 07.00 மணியளவில் நான் பவானி - சக்தி மெயின் ரோட்டில் நல்லக்கவுண்டன்புதூர் ஐயர் வீட்டிற்கு அருகில் எனது இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடதுபுற ஓரமாக சென்று கொண்டிருந்தபோது எதிர் திசையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த கார் வலது புறமாக ஏறி வந்து என் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டது. அதில் எனக்கு வலது முழங்கால், இடது முழங்கை மற்றும் இடது கை விரல்கள், வலது கால் பெருவிரல் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. வலது கண்ணுக்கு மேலே பலத்த காயம் ஏற்பட்டது. அடிவயிற்றிலும் எனக்கு பலத்த அடி ஏற்பட்டது. அப்போது அங்கு இருந்த ஜான் என்பவர் என்பவரும் மற்றொருவரும் எனது மைத்துனர் வேலன் என்பவருக்கு தகவல் தர அவர் வந்து அவரது பைக்கில் என்னை ஆப்பக்கூடல் VMK மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். அங்கு சிகிச்சை முடித்துவிட்டு அன்றைய தினம் நான் வீட்டுக்கு சென்று விட்டேன். வீட்டிற்கு சென்ற பிறகு அடி வயிற்றில் வலி மிக அதிகமாக இருந்ததால் மறுநாள் 30.12.2023-ஆம் தேதியன்று காலையில் நான் சிகிச்சைக்காக அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் அந்தியூர்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.08.12 06:40:23 +0530

அரசு மருத்துவமனையில் ஒரு வார காலம் உள்நோயாளியாக தங்கி இருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டேன். திடீரென விபத்து ஏற்பட்டதாலும், அதனால் ஏற்பட்ட பதற்றத்தின் காரணமாகவும் மேற்படி காரை ஓட்டி வந்த நபரை என்னால் சரியாக அடையாளம் காண இயலவில்லை. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு மது அருந்தும் பழக்கம் இருக்கிறது என்றால், சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும் எனக்கு மது அருந்தும் பழக்கம் இருக்கிறது என்றாலும், நான் தான் மது அருந்திவிட்டு எதிரே வந்த வாகனத்தின் மீது விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால், சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவுதான் காரணம் என்றால், சரியல்ல. நான் மது அருந்தியதால் தான் அரசு மருத்துவமனைக்கு செல்லாமல் தனியார் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால், சரியல்ல.

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.12 06:40:31 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.